செ.வெ.எண். 234/2009(செமதொஅ) நாள் : 05.08.2009.

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் புலப்படங்கள் வரைவு கணினி பிரிவை நில அளவை மற்றும் நிலவரித் திட்ட முதன்மை செயலர் மற்றும் ஆணையர் டாக்டர் ஆர்.கண்ணன்,இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்தார்.**

காஞ்சிபுரம் மாவட்டம் நில அளவை பதிவேடுகள் துறையில் புலப்படங்கள் கணினி மயமாக்கும் திட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள ஆவண காப்பறையில் கணினி பிரிவினை நில அளவை மற்றும் நிலவரி திட்ட முதன்மை செயலர் மற்றும் ஆணையர் டாக்டர் ஆர்.கண்ணன்,இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்தார்.

இத்திட்டத்தின் வாயிலாக மாவட்டத்தின் அனைத்து கிராமங்களின் புலப்படங்கள் கிராம வாரியாக தயாரிக்கப்பட்டு பாதுகாக்கப்படுவதுடன் தேவையான புலப்படங்கள் அதற்கான நகல்களை பொதுமக்கள் பிற்காலத்தில் உடனடியாக பெற்றுக் கொண்டு பயன் பெறலாம்.

இவ்விழாவில் நில அளவைத் துறை கூடுதல் இயக்குநர் திரு.சி.பி.இராதாகிருஷ்ணன், சென்னை மண்டல துணை இயக்குநர் திரு.ஆர்.எஸ்.மணி, காஞ்சிபுரம் மாவட்ட நில அளவை உதவி இயக்குநர் திரு.கி.மதனகோபால் மற்றும் மாவட்ட தகவல் மைய அலுவலர் திரு. எம்.வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்.